JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 734/2025 |
| | : | Prosecution P.W - 4 |
| NAME | : | அந்தோணிராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 03.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேர்ந்தமரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பாம்புகோவில் சந்தை அருகே வைத்து பார்த்துள்ளேன். அசா.3 அந்தோணிசாமி என்ற செல்லப்பா என்னுடைய பெரியப்பா. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தேதி, மாதம் நினைவில் இல்லை. போன வருடம் நானும், என் பெரியப்பாவும் பாம்பு கோவில் சந்தை ரயில்வே நிலையத்திற்கு காலை 7 முதல் 7.15 மணியளவில் சென்ற போது போலிசார் ஆஜர் எதிரியை பிடித்திருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரி போலிசாரிடம் நகைகளை திருடியதாக சொன்னார். ஆஜர் எதிரி நெக்லஸ், வளையல்கள் 4, கம்மல் 2 எண்ணம் ஆகியவற்றை கருப்பு நிறம் போட்ட நடுவில் நீலக்கலர் உள்ள பேக்கில் இருந்து ஆஜர் எதிரி நகைகளை ஒப்படைத்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பையிலிருந்து தான் ஆஜர் எதிரி நகைகளை போலிசாரிடம் ஒப்படைத்தார். மேற்படி அசாஆ.2 மற்றும் அசாஆ.3 ஆக குறியீடு

செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் முறையே அசாஆ.4 மற்றும் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் சாட்சியாக நாங்கள் கையொப்பம் செய்தோம். போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 734/2025 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | அந்தோணிசாமி என்ற செல்லப்பா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 03.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேர்ந்தமரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பாம்புகோவில் சந்தை ரயில்வே நிலையத்திற்கு அருகே போலிசார் விசாரித்த போது ஆஜர் எதிரியை நான் பார்த்தேன். சாட்சி அந்தோணிராஜ் என் தம்பி மகன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தேதி, மாதம் நினைவில் இல்லை. போன வருடத்தில் காலை 7 முதல் 7.15 மணியளவில் பாம்புகோவில் சந்தை ரயில்வே கேட்டிற்கு அருகே நானும், என் தம்பி மகன் அந்தோணி ராஜீம் வந்த போது போலிசார் ஆஜர் எதிரியை விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரி அவரது சொந்த ஊர் வீரசிகாமணி என்றும் போலிசார் விசாரணையில் தன்னுடைய அத்தை வீட்டில் பீரோவிலிருந்து 5 தங்க நகைகளை திருடிக்கொண்டு வந்ததாக போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்னர் ஆஜர் எதிரி கவர்னர் மாலை, 2 மோதிரம்,கம்மல், செயின்,மொத்தம் 5 தங்கநகைகள் கருப்பு பையிலிருந்து

போலிசாரிடம் ஆஜர் எதிரி ஒப்படைத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பை மற்றும் புகைப்படங்களில் உள்ள நகைகளை தான் ஆஜர் எதிரி போலிசாரிடம் ஒப்படைத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.2 மற்றும் அத்தாட்சி அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi